# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2014 மே திங்கள் 30–ம் நாள் (30.05.2014) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**21.02.2014–ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்கள்**
**ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண். 7**

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு தேவையான மேஜை, நாற்காலி ஆகியவற்றை The Kanyakumari District Co-op. Society Ltd., Nagercoil நிறுவனத்திடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்வதற்கும், அதற்கான செலவுத் தொகை ரூ.1,11,800/– ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும், இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.819 நாள் 30.01.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் பின்னர் TANSI FABRICATION WORKS, Rajapalayam நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்புள்ளியில் பொருட்களின் விலைவிதிகம் முந்தைய நிறுவனத்தின் விலைவிகிதத்தைவிட குறைவாக இருந்ததால் TANSI FABRICATION WORKS, Rajapalayam நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கப்பட்டது. எனவே மேற்படி பொருள் தொடர்பாக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** 1) மேற்படி பொருள் தொடர்பான இந்நகர்மன்றத் தீர்மானம் எண். 819 நாள் 30.01.2014–ஐ ரத்து செய்யலாம்.

2) இந்நகராட்சி நிதிநிலையை கருத்தில் கொண்டு கூாந முயலேயமரஅயசை னுளைவசைஉவ Co-op.Society Ltd., Nagercoil நிறுவனத்தை விட குறைந்த விலை விகிதத்தில் விலைப்புள்ளி அளித்த TANSI FABRICATION WORKS, Rajapalayam நிறுவனத்திற்கு வினியோக உத்தரவு வழங்கியதற்கும், அதற்கான செலவுத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1871/2010)

**தீர்மானம் எண்.868 தீர்மானம் எண்.819 ரத்து செய்யப்பட்டது. TANSI Fabrication Work, Rajapalayam நிறுவனத்திற்கு வழங்கிய வினியோக உத்தரவும் ரத்து செய்திட தீர்மானிக்கப்பட்டது.**

**ஒத்திவைக்கப்பட்ட பொருள் எண். 10**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 14.08.2013–ம் தேதியிட்ட மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளபடி, பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் 2012–13 கூடுதல் நிதி ஒதுக்கீடு (2012–13–ல் சென்னை மாநகராட்சியின் செலவு செய்யப்படாத தொகையினை சேர்த்து) கீழ்க்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | பிரிவுகள் | | தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | சுய வேலை வாய்ப்புத் திட்டம் | USEP | 1,74,682 |
| 2 | மகளிர் சுயஉதவிக்குழு – குழுக்கடன் | UWSP | 1,31,011 |
| 3 | மகளிர் சுயஉதவிக்குழு – சுழல் நிதி | UWSP-RF | 43,670 |
| 4 | வேலை மேம்பாட்டுக்கான திறன் வளர்ச்சி பயிற்சி | STEP UP | 3,49,363 |
| 5 | கூலி வேலைவாய்ப்பு | UWEP | 1,18,085 |

| | | | |
|---|---|---|---|
| 6 | சமுதாய மேம்பாட்டு கூட்டமைப்பு | UCDN | 87,341 |
| | **மொத்தம்** | | 9,04,152 |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.2707/2013/ச.அ)

**தீர்மானம் எண்.869 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 1**

இந்நகராட்சியின் 2013–14–ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2014–15 –ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீடு ஆகியவை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.பி1/5630/2011)

**தீர்மானம் எண்.870 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு மன்றம் அங்கீகரிக்கப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 21–வது வார்டு உறுப்பினர் எம்.நூர்முகமது அவர்கள் மட்டும் வெளிநடப்பு செய்ய, மீதமுள்ள அனைத்து உறுப்பினர்கள் அங்கீகரிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியின் 2011–12–ம் ஆண்டு கணக்கு முடித்து கொடுக்கப்பட்டமைக்கு கன்சல்டன்ட் திரு.வி.சீனிவாசன் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டு தணிக்கை துறையினருக்கு அனுப்பி வைக்கப்பட்டு தணிக்கை முடிவுற்றுள்ளது. எனவே 2011–12 –ம் ஆண்டுக்கான கணக்குகளை முடித்து கொடுத்த வகைக்கு திரு.வி.சீனிவாசன், கன்சல்டன்ட்க்கு ஊதியமாக ரூ.20,000/–ம் வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : இந்நகராட்சியில் கணக்கர் பணியிடம் இல்லாததால் ஆண்டு கணக்குகளை முடிப்பதற்கு மிகவும் சிரமமாக உள்ளது. எனவே கன்சல்டன்ட் மூலம் 2011–12–ம் ஆண்டு கணக்கு முடித்து, உள்ளாட்சி நிதி தணிக்கை துறையிடமிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. திரு.வி.சீனிவாசன், கன்சல்டன்ட்க்கு ரூ. 20,000/– வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.பி1/2585/2007)

**தீர்மானம் எண்.871 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில்வரி, கடை வாடகை, தொழில் உரிம கட்டணம் ஆகியவற்றின் நிலுவை வரியை செலுத்த கோரி தினமுரசு பத்திரிகையில் விளம்பரம் செய்த வகையில் ரூ.1,500/– வழங்க கேட்டு பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள். மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.அ1/4826/2012)

**தீர்மானம் எண்.872 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 28.03.2014–ம் தேதிய டெங்கு நோய் தடுப்பு ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளான அபேட் மருந்து தெளித்தல், புகை மருந்து அடித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கு நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் போதிய துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தால், மாவட்ட ஆட்சியர் அவர்களின் தினக்கூலி பட்டியலின் அடிப்படையில் 15 தினக்கூலி பணயாளர்களை நாள் ஒன்றிற்கு ரூ.330/– வீதம்

2 மாதங்களுக்கு பணிக்கு அமர்த்தவும், பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை நகராட்சி சட்ட பிரிவு 15–ன்கீழ் மேற்கொண்டு, அதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.3.00 இலட்சத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/1982/2012)

**தீர்மானம் எண்.873 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 5**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.17031/12/ஜே1 நாள் 02.05.2013–ன்படி, இந்நகராட்சிக்கு சுகாதார அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்த திரு.பி.சோழராஜ், சுகாதார அலுவலர் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மாறுதல் பயணப்படி பட்டியல் தொகை ரூ.18,490/– ஐ நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/130/2010)

**தீர்மானம் எண்.874 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடை எண்.41, 42, 43, 54, 55, 56, 12, 23, 14 மற்றும் 21 பேருந்து நிலைய கடை எண். 8, 30 தினசரி சந்தையில் உள்ள கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி கடைகளுக்கு கீழ்கண்டவாறு உரிமம் முடிவடைவதால் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு கடை வாடகை உரிமம் நீட்டிப்பு செய்தும் வாடகை தொகையில் 15% உயர்வு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வரிவிதிப்பு எண். | உரிமைதாரர் பெயர் | உரிமம் முடிவடையும் தேதி | உரிமம் நீட்டிப்பு செய்யும் காலம் | தற்போதைய வாடகை தொகை | 15% உயர்வு செய்த தொகை | உயர்வு செய்யப்பட்ட பின்னர் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2007063 | General Manager<br>KK Dist.<br>Co-op.milk production | 28.02.2013 | 01.03.2014 | 276 | 41 | 317 |
| 2 | 2011004 | பி.மார்ஷல் பெலிக்ஸ் | 28.02.2013 | 01.03.2014 | 3000 | 450 | 3450 |
| 3 | 2008001 | எம். மேத்யு | 30.04.2014 | 01.04.2014 | 1173 | 176 | 1349 |
| 4 | 2008002 | எம். மேத்யு | 30.04.2014 | 01.05.2014 | 1167 | 175 | 1342 |
| 5 | 2008003 | எம். மேத்யு | 30.04.2014 | 01.05.2014 | 1173 | 176 | 1349 |
| 6 | 2008004 | எம். மேத்யு | 30.04.2014 | 01.05.2014 | 1173 | 176 | 1349 |
| 7 | 2008005 | எம். மேத்யு | 30.04.2014 | 01.05.2014 | 1167 | 175 | 1342 |
| 8 | 2008006 | எம். மேத்யு | 30.04.2014 | 01.05.2014 | 1173 | 176 | 1349 |
| 9 | 2009003 | இளநிலைபொறியாளர் | 31.05.2014 | 01.06.2014 | 5175 | 776 | 5951 |
| 10 | 20011006 | மோகன்லால் பாபு | 31.05.2014 | 01.06.2014 | 1525 | 229 | 1754 |
| 11 | 2005008 | தீயணைப்பு நிலையம் | 31.03.2014 | 01.04.2014 | 1480 | 225 | 1702 |
| 12 | 20050300 | காதி போர்டு | 31.05.2014 | 01.06.2014 | 2082 | 312 | 2394 |

**அ.குறிப்பு** : மேற்படி வாடகைதாரர்களின் உரிமகாலம் முடிவடைந்துள்ளதால் மீண்டும் மூன்றாண்டுகளுக்கு கால நீட்டிப்பு செய்து உரிமம் வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/2035/2012)

**தீர்மானம் எண்.875 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. 15% உயர்வு செய்து உரிமம் வழங்கிட தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சி குடிநீர் லாரி TN.74-Z-5304–ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்கு கீழ்க்காணும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.48,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

| | |
|---|---|
| 1 | பின் பம்பரில் 5"சானல் பொருத்துதல். |
| 2 | டீசல் டேங்கில் இரண்டு பிராக்கட் பொருத்துதல். |
| 3 | பின்பக்கம் இரண்டு கிராஸ்பார் மாற்றுதல் மற்றும் பின்பக்கம் இரண்டு கதவு பிராக்கட் மற்றும் அபாய விளக்கு புதுப்பித்தல். |
| 4 | ஓட்டுநர் இருக்கை சரி செய்து பொருத்துதல் மற்றும் அப்போல்ஸ்டரி ஒர்க்ஸ். |
| 5 | முன்பக்கம் இன்டிகேட்டர் விளக்கு மாற்றுதல். |
| 6 | கதவுகளின் உட்புற லாக் – 2, வெளிபுற லாக் – 2, உட்புற கைப்பிடி –2 மாற்றுதல். |
| 7 | Air filter பிராக்கட், ஏர் கிளினர் பிராக்கட் புதுப்பித்தல். |
| 8 | வைபர் பிளேடு இரண்டு மாற்றுதல். |
| 9 | எலக்ட்ரிக்கல் செக்கப் செய்து ஒயரிங் செக்கப் செய்தல். |
| 10 | நான்கு வீல் பிரேக் சரி செய்தல். |
| 11 | வாகனம் சர்வீஸ் செய்தல். |
| 12 | வாகனம் முழுவதும் வர்ணம் பூசுதல். |
| 13 | டேங்க் உள் பாகம் வர்ணம் பூசுதல். |

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5754/2010)

**தீர்மானம் எண்.876 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி திட்டப் பணிகள் தொடர்பான விளம்பரத்தை தினமணி பத்திரிக்கையின் உள்ளாட்சி சிறப்பிதழ் 2014–ல் வெளியிட்ட வகையில் ரூ.25,000/– ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2045/2012)

**தீர்மானம் எண்.877 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சி திட்டப் பணிகள் நிதி ஒதுக்கீடு தொடர்பான விளம்பரத்தை மாலை முரசு பத்திரிக்கையின் பொங்கல் மலர் 2014–ல் வெளியிட்ட வகையில் ரூ. 7,000/– ஐ வழங்க கேட்டு பட்டியல் பெறப்பட்டுள்ளது. எனவே மேற்படி தொகையினை சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2045/2012)

**தீர்மானம் எண்.878 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலை கட்டமைப்பு திட்டம் (TURIP ) 2014–15–ன் கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள சாலைப் பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட பள்ளிரோட்டில் C.M.Plant–ஐ உபயோகித்து தார் சாலை அமைத்தல். | 49.60 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22–ல் இராஜாக்கமங்கலம் பிரதான சாலையை ஒட்டி அமைந்துள்ள குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 24.00 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட செட்டியத்தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 19.00 |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட பவுண்டரி சாலை முதல் திக்கணங்கோடு செல்லும் சாலை வரை நடைபாதையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 34.00 |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட பந்தவிளை குறுக்கு தெரு மற்றும் வார்டு எண்.2 அழகுவிளையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 30.00 |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட கணியாக்குடி மற்றும் நரிக்கல் சந்திப்பு அருகில் சாஸ்தாகோவில் முதல் பாம்பூரி வாய்க்கால் கரையோரம் வரை பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 30.00 |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட காவடிவிளையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 12.00 |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, 12, 13 & 14 துறைமுகத் தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல். | 20.50 |
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 8, 9 & 10 மரமடி தெருக்களில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 19.00 |
| 10 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு கடற்கரை சாலையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 10.00 |
| 11 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4–ல் சுனாமி காலனியில் (மார்ட்டின் வீட்டு அருகில்) பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 6.50 |
| 12 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15 மாதாகாலனியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 11.00 |
| 13 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 23–ல் தைநாத்தன்கரை சாலையில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 23.50 |
| 14 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு சைமன்காலனி பாலம் அருகில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 11.00 |
| | மொத்தம் | **300.10** |

மேற்காணும் பணிகளுக்கு தமிழ்நாடு நகர்புற சாலை கட்டமைப்பு திட்டம் 2014–15–ன்கீழ் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/ /2010)

**தீர்மானம் எண்.879 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.14964/2014/இ1 நாள் 16.05.2014–ல் கேட்டுக் கொண்டுள்ளபடி, இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2014–15–ன்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில் |
|---|---|---|
| **I** | **வடிகால் ஓடை பணிகள் :** | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் – திங்கள் நகர் பிரதான சாலையில் (அண்ணாசாலை முதல் பேருந்து நிலையம் தெற்கு பக்கம் வரை) மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல். | 48.00 |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் – திங்கள் நகர் பிரதான சாலை (திங்கள்நகர் சாலை முதல் பேருந்து நிலைய வடக்கு பக்கம் வரை) மற்றும் கிரி தங்கம் மருத்துவமனை முன்புறம் வரை மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல். | 49.75 |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகச் சாலையில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல். | 18.70 |
| 4 | இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளை மற்றும் சீம்பிளிவிளை தெருக்களில் வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 15.00 |
| 5 | இந்நகராட்சிக்குட்பட்ட இக்பால் தெருவில் வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 9.00 |
| 6 | இந்நகராட்சிக்குட்பட்ட குளச்சல் கடை மற்றும் ஆண்டிப்பிள்ளை தெருக்களில் வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 16.70 |
| 7 | இந்நகராட்சிக்குட்பட்ட ஆசாத் நகர், மலிக்காகிணறு சாலை மற்றும் இந்திரா காலனி முதல் பெரியப்பள்ளி சாலை வரை வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 25.00 |
| 8 | இந்நகராட்சிக்குட்பட்ட ஆசாரிமார் மேலத்தெரு மற்றும் ஆசாரிமார் கீழத்தெருவில் வடிகால் ஓடைக்கு மேல்மூடி அமைத்தல். | 16.00 |
| | **மொத்தம்** | **198.15** |
| **II** | **திடக்கழிவு மேலாண்மை பணிகள் :** | |
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான லியோன்நகர் உரக்கிடங்கில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்தல். | 10.00 |
| 2 | இந்நகராட்சிக்கு சொந்தமான லியோன்நகர் உரக்கிடங்கில் 2 எண்ணம் Windrows Platform அமைத்தல். | 20.00 |
| 3 | இந்நகராட்சிக்கு சொந்தமான லியோன்நகர் உரக்கிடங்கிற்கு தேவையான 1 M.T Shreading Machine with accessories வாங்குதல். | 7.50 |
| 4 | இந்நகராட்சிக்கு சொந்தமான லியோன்நகர் உரக்கிடங்கில் 10 K.W. திறன் கொண்ட Bio-Methanisation Plant வடிவமைத்தல் மற்றும் நிறுவுதல். | 25.00 |
| | **மொத்தம்** | **62.50** |
| **III** | **குடிநீர் வினியோக பணிகள் :** | |
| 1 | இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக ISI / ISO தரம் வாய்ந்த 5.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட SMC Panel ground level Reservoir வடிவமைத்தல் மற்றும் நிறுவுதல். | 50.00 |
| 2 | இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக Chlorination Plant வடிவமைத்தல் மற்றும் நிறுவுதல். | 25.00 |
| 3 | இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக 15 HP Bed type Sub-mercible Motor including Water Meter, Non return valve with accessories வினியோகம் செய்தல் மற்றும் பொருத்துதல். | 10.00 |

| | | |
|---|---|---|
| 4 | இந்நகராட்சி குடிநீர் வினியோகத்திற்காக புதிய தரைதள நீர்த்தேக்க தொட்டியிலிருந்து (GLR) ஏற்கனவே அமைந்துள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் ஆழ்துளை கிணறுகளுக்கு குடிநீர் குழாய் (Pumping Main) அமைத்தல். | 25.00 |
| | **மொத்தம்** | **110.00** |
| **IV** | **தெருவிளக்கு பணிகள் :** | |
| 1 | இந்நகராட்சி தெருவிளக்கு பராமரிப்பு பணிகளுக்காக 24 வாட்ஸ் LED விளக்குகள் மற்றும் உபகரணங்கள் வினியோகம் செய்தல் மற்றும் பொருத்துதல். | **15.00** |
| | **மொத்தம்** | **15.00** |

மேற்காணும் பணிகளுக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.385.65 இலட்சத்தை ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி குழுமம் 2014–15 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1115/2014)

**தீர்மானம் எண்.880 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி இந்திரா காலனி குப்பை கொட்டுமிடத்தில் திடீரென்று தீப்பிடித்து விட்டதால், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு தீயை அணைக்கும் பணியினை நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்டு 1" Hose மற்றும் Specials வாங்கிய வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.3,614/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிய விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/449/2014)

**தீர்மானம் எண்.881 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN.75.L.2565–ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை ரூ.9,500/–க்கு பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. தேர்தல் விதிமுறைகள் அமுலில் இருப்பதால் மேற்படி பணியின் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டும், பொது சுகாதார நலன் கருதியும், நகராட்சிகளின் சட்டம் பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டதை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/1841/2013)

**தீர்மானம் எண்.882 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்கு சொந்தமான காம்பேக்டர் லாறியில் ஆயில் பில்டர் டீசல் பில்டர் பழுதாகி உள்ளதால் பொதுசுகாதாரப் பணியின் அவசரம் அவசியம் கருதி பணியினை சரி செய்த வகையில் ரூ.1,200/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1841/2013)

**தீர்மானம் எண்.883 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் குப்பைகள் நிறைந்து விட்டதால் மேற்படி இடத்தில் உள்ள குப்பைகளை Hitachi மூலம் ஒதுக்கி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூ.22,700/– க்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. தேர்தல் விதிமுறைகள் அமுலில் இருப்பதால் மேற்படி பணியின் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டும், பொது சுகாதார நலன் கருதியும், நகராட்சிகளின் சட்ட பிரிவு 15–ன்கீழ் பணியினை மேற்கொண்டதை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/608/2014)

**தீர்மானம் எண்.884 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்கு சொந்தமான குப்பை கிடங்கில் குப்பைகள் நிறைந்து விட்டதால் மேற்படி இடத்தில் உள்ள குப்பைகளை Hitachi மூலம் ஒதுக்கி வைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு ரூ.23,040/– க்கு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. தேர்தல் விதிமுறைகள் அமுலில் இருப்பதால் மேற்படி பணியின் அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டும், பொது சுகாதார நலன் கருதியும், நகராட்சிகளின் சட்ட பிரிவு 15–ன்கீழ் பணியினை மேற்கொண்டதை மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.எச்1/608/2014)

**தீர்மானம் எண்.885 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்குட்பட்ட 24–வது வார்டில் அமைந்துள்ள கதவு எண்.29/154A கட்டிடத்தில் இதற்கு முன்னர் தும்பு கம்பெனி இயங்கி வந்ததால், மேற்படி கட்டிடத்தின் குடிநீர் இணைப்பு எண். 3944 கொண்ட கேட்பானது வணிக பயன்பாட்டில் இருந்து வந்தது. மேற்படி கட்டிடமானது தற்சமயம் திரு. பி.தங்கையன் நாடார் என்பவர் குடியிருப்பாக பயன்படுத்தி வருவதால் மேற்கண்ட கதவு எண்ணில் உள்ள குடிநீர் இணைப்பு கேட்பினை வணிக பயன்பாட்டில் இருந்து குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/ /2014)

**தீர்மானம் எண்.886 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட மெயின்ரோடு பகுதியில் வசிக்கும் திபூர்சியஸ், குடிநீர் இணைப்பு எண்.2114, கதவு எண்.22/44 என்ற கட்டிடம் 2012–13–I–க்கு பிறகு இடிக்கப்பட்டுள்ளது. ஆனால் உரிய பதிவுகள் கணனியில் மேற்கொள்ளப் படாததால் மேற்படி கட்டிடத்தின் குடிநீர் இணைப்பு கேட்பானது 01.10.2010 முதல் 31.03.2014 வரை கணனியில் கேட்பு எழுப்பப்பட்டு ரூ.2,184/– நிலுவையாக உள்ளது. எனவே மனுதாரர் கேட்டுக் கொண்டுள்ளபடி, மேற்படி குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்த காலத்திலிருந்து தற்போது நடப்பு ஆண்டு காலத்திற்கான தொகை ரூ.2,184/– ஐ கணனியில் நீக்கம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/448/2014)

**தீர்மானம் எண்.887 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை பகுதியில் கதவு எண்.20/87, என்ற கட்டிடத்தில் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு எண்.2998–ஐ ரத்து செய்ய மனுதாரர் திருமதி.மரியம்பீவி விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்கண்ட குடிநீர் இணைப்பினை ரத்து செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/660/2014)

**தீர்மானம் எண்.888 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சிக்குட்பட்ட பர்னட்டிவிளையில் கதவு எண்.3/10–ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு எண். 214–ஐ தற்காலிகமாக துண்டிக்குமாறு மனுதாரர் திரு.ஆல்பர்ட் நேசமணி என்பவர் கோரியுள்ளார். மேற்கண்ட கதவு எண்ணின் மீது வரி நிலுவை ஏதும் இல்லை. எனவே மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று மேற்கண்ட கதவு எண்ணின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1029/2010)

**தீர்மானம் எண்.889 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சிக்குட்பட்ட பண்டாரவிளை கதவு எண்.2/112–ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு எண்.309–ஐ தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மனுதாரர் திருமதி.சியாமளா குமாரி என்பவர் விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்கண்ட குடிநீர் குழாய் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/808/2014)

**தீர்மானம் எண்.890 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு கதவு எண்.13/30.எ.–ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு எண். 1519 தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மனுதாரர் திரு.மிக்கேல்தாசன் என்பவர் விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்கண்ட குடிநீர் குழாய் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/564/2014)

**தீர்மானம் எண்.891 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23**

இந்நகராட்சிக்குட்பட்ட காரிதாஸ் காலனி கதவு எண்.4/562–ல் உள்ள குடிநீர் குழாய் இணைப்பு எண். 758 தற்காலிகமாக துண்டிப்பு செய்வதற்கு மனுதாரர் திரு.ராயப்பன் மற்றும் அல்போன்சாள் என்பவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். எனவே மேற்கண்ட குடிநீர் குழாய் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/813/2014)

**தீர்மானம் எண்.892 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் தெரு, கதவு எண்.29/75 கட்டிடத்தின் சொத்துவரி, குடிநீர் கட்டண வரி நிலுவை இருந்த காரணத்தால் 2007–08 மார்ச் மாதத்தில் குடிநீர் இணைப்பு எண்.3856 துண்டிக்கப்பட்டுள்ளது. 2007–08 I&II காலாண்டுக்கான கேட்பு மனுதாரர் திரு.சுந்தர்ராஜ் என்பவரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆனால் 01.10.2007 முதல் 2007–08 III–வது காலாண்டு வரை உரிய பதிவுகள் பதிவேடுகள் மற்றும் கணனியில் பதிவு செய்யப்படவில்லை. மேற்படி கட்டிடத்தின் குடிநீர் இணைப்பின் கேட்பானது 2007–08 III –வது காலாண்டு முதல் 2013–14 IV–ம் காலாண்டு வரை ரூ.4,056/– கேட்பு எழுப்பப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் திரு.சுந்தர்ராஜ் குடிநீர் இணைப்பு மீண்டும் வழங்க கோரி 20.01.2014 –ல் மனு செய்துள்ளார். எனவே துண்டிப்பு செய்யப்பட்ட குடிநீர் இணைப்பு மீண்டும் வழங்கவும், மேற்படி குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்த காலத்திலிருந்து தற்போது நடப்பு ஆண்டு காலத்திற்கான தொகையினை நீக்கம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/91/2014)

**தீர்மானம் எண்.893 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 25**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2013–14–ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18–ல் பீச்ரோடு முகைதீன் பள்ளி இடுகாடு சுற்றுச்சுவர் கட்டும் பணியினை ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 25.02.2014 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர். | மதிப்பீட்டைவிட 0.84% அதிகம். |
| 2. | திரு.P.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்ததாரர். | மதிப்பீட்டைவிட 0.02% குறைவு. |

மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணியினை உரிய காலத்திற்குள் முடிக்க வேண்டிய அவசியத்தை கருத்தில் கொண்டு, இந்நகர்மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/153/2014)

**தீர்மானம் எண்.894 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 26**

இந்நகராட்சியில் O & M Gap filling fund 2014-15 / IUDM 2014-15–ன்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் தற்போதைய அலுவலக கட்டிடத்தை மேம்படுத்துதல். | 50.00 |
| 2 | இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் நிரந்தர கடைகள் கட்டுதல் | 50.00 |
| | **மொத்தம்** | **100.00** |

மேற்காணும் பணிகளை திட்ட நிதியின்கீழ் மேற்கொள்வதற்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/153/2014)

**தீர்மானம் எண்.895 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 27**

இந்நகராட்சி வரிவசூல் மையத்தில் வசூலாகும் பணத்தை பாதுகாப்பாக வைப்பதற்கு அலுவலகத்தில் பாதுகாப்பு பெட்டகம் அமைப்பதற்கு தேவையான பெட்டகம் ( Double lock System ) ஒன்றை TANSI நிறுவனத்திடமிருந்து நேரடியாக வாங்குவதற்கான செலவுத் தொகை ரூ.3,315/—க்கும், மேற்படி தொகையினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/737/2014)

**தீர்மானம் எண்.896 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 28**

இந்நகராட்சி ஈப்பு எண். TN.74.V.3530—ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்வதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.5,000/—க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5030/2007)

**தீர்மானம் எண்.897 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 29**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு, வார்டு எண்.12—ல் கடல் அரிப்பை தடுக்கும் வகையில் பொதுப்பணித் துறையால் தடுப்பு சுவர் அமைக்கப்பட்டுள்ளதால், அப்பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள வடிகால் ஓடையில் அடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் தேங்கியுள்ளது. இதனால் சுகாதாரக் கேடு ஏற்பட்டு, பொதுமக்களுக்கு நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதோடு, பொதுமக்கள் நடந்து செல்வதற்கும் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே பொது நலனை கருத்தில் கொண்டு மேற்படி அடைப்பு ஏற்பட்டுள்ள வடிகால் ஓடையின் அருகில் சுத்திகரிப்பு தொட்டி அமைத்து, கழிவுநீரை சுத்திகரித்து கடலில் சேர்ப்பதற்கும், வடிகால் ஓடையில் மூடு சிலாப் அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 2,50,000/— க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/737/2014)

**தீர்மானம் எண்.898 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 30**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் ஆர்.சி.கோவில் அருகில் அமைந்துள்ள சுனாமி நினைவு சின்னத்தை சுற்றி பேவர் பிளாக் அமைப்பதற்கும், மேலும் கோவிலின் முன்புறம் அமைந்துள்ள சாலை சேதமடைந்து குண்டும், குழியுமாக உள்ளதால், மேற்படி சாலையில் டைல்ஸ் அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ. 3,00,000/— க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1200/2014)

**தீர்மானம் எண்.899 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 31**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலைய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் அருகில் காலியாக உள்ள இடத்தில் நகராட்சிக்கு வருவாய் ஏற்படுத்தும் வகையில் ரேசன் கடை கட்டுவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/—க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1201/2014)

**தீர்மானம் எண்.900 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 32**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.41330/2013/TP-3 நாள் 21.05.2014—ல் போக்குவரத்து இயக்குதல் மற்றும் மேலாண்மை திட்டம் மற்றும் பூங்கா மேம்பாட்டு திட்டப் பணிகள் மேற்கொள்வதற்கு நகர் ஊரமைப்பு மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு பணிகள் தேர்வு செய்து பிரேரணை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட லியோன்நகர் உரக்கிடங்கு வளாகத்தில் பூங்கா அமைத்தல். | ரூ.12.00 இலட்சம் |
| 2 | இந்நகராட்சிக்குட்பட்ட மரமடி குருசடி அருகில் பூங்கா அமைத்தல். | ரூ.12.00 இலட்சம் |
| 3 | இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு குருசடி அருகில் பூங்கா அமைத்தல். | ரூ.12.00 இலட்சம் |
| | **மொத்தம்** | **ரூ. 36.00 இலட்சம்** |

மேற்காணும் பணிகளுக்கு திட்ட நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1166/2014)

**தீர்மானம் எண்.901 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 33**

இந்நகராட்சிக்குட்பட்ட கலைஞர் கருணாநிதி வணிக வளாக கட்டிடத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலக கட்டிடத்தின் தரை, சுவர் பகுதிகள் மற்றும் கதவுகள் பழுதடைந்துள்ளதால், மேற்படி பழுதுகளை சரி செய்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/—க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/796/2014)

**தீர்மானம் எண்.902 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 34**

இந்நகராட்சியில் 2011—12—ம் ஆண்டு முடிவுற்ற தணிக்கை அறிக்கையினை ஜெராக்ஸ் எடுத்து பைண்டிங் செய்த வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ. 3,450/— ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ1/942/2010)

**தீர்மானம் எண்.903 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 35**

காமராஜர் பேருந்து நிலையத்தின் அருகாமையில் படிப்பகமாக பயன்படுத்தப்பட்டு வந்த கட்டிடத்தை குளச்சல் டவுண் (KDWCC) நியாயவிலை கடைக்கு தற்காலிகமாக மூன்று மாதங்களுக்கு வழங்க, தலைவர், மணவாளக்குறிச்சி கூட்டுறவு பண்டகசாலை லிட்., எண்.2444 மணவாளக்குறிச்சி அவர்கள் கேட்டுக்கொண்டதன் பேரில் மாதவாடகை ரூ.750/– நிரக்கில் வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.அ1/2035/2002)

**தீர்மானம் எண்.904 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி